

விலை: 30/=
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 37 கதிர் : 49 | வெள்ளிக்கிழமை 14 ஜனவரி 2022 | தை 01 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 24



முச்சந்தி முரளி

"தை பிறந்தா வழி பிறக்குமெண்டுவினம், ஆனா எங்களுக்கு தை பிறக்க வலியெல்லோ பிறந்திருக்கு..."

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உதயனின் இனிய தைப்பொங்கல் தின நல்வாழ்த்துக்கள்.

## '13' ஆவது திருத்தம்
# தமிழ் மக்களுக்கு எதிரான சதியே!

- முறியடிக்கும் முயற்சியாக ஜனவரி 30 இல் ஆர்ப்பாட்டம்
- கஜேந்திரகுமார் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 14

தமிழ் மக்களுக்கு எதிரான சதி நடவடிக்கையே '13'ஆம் திருத்தம். அந்த சதியிலிருந்து முப்பது வருடங்களுக்கும் மேலாக உயிர்த்தியாகம் செய்து ஏதோவொரு வகையில் மக்களைத் தக்கவைத்துக் கொண்டு இருக்கின்றோம். இந்தச் சதியை நாங்கள் மக்களாலேயே முறியடிக்க வேண்டும் – என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 23 ▶ தெரிவித்தார்.



## மைத்திரிபாலவை சிறையிட முயற்சி!
அம்பலப்படுத்தினார் தயாசிறி

கொழும்பு, ஜன. 14

"மைத்திரிபால சிறிசேனவை திட்டமிட்ட அடிப்படையில் சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு 23 ▶

## அறுவைச் சிகிச்சையால் பெண் சாவு
## 18ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 14

நெல்லியடியிலுள்ள தனியார் மருத்துவமனையில், அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட பெண் கிருமித் தொற் 23 ▶

## மாதகல் மீனவர் உயிரிழப்பு நீதி கோரிப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 14

மாதகல் கடற்பரப்பில், கடற்படையினரின் படகு மோதியதால், உயிரிழந்தார் என்று கூறப்படும் குடும்பத்தலைவரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் நேற்று, அங்கு 23 ▶



## ரூ.5,000 கொடுப்பனவு சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, ஜன. 14

அரச அலுவலர்களுக்கும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கான சுற்றறிக்கையை அரசு நேற்று வெளியிட்டது. (கு-இ)

## பங்காளிகளே பலமடையுங்கள் பொதுச்சின்னத்தில் சேர்வோம்!
விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

ஒவ்வொரு பங்காளிக் கட்சியும் தம்மைப் பலப்படுத்த வேண்டும். பின்னர், தேர்தல் காலத்தில் எல்லோரும் சேர்ந்து பொதுச் சின்னத்தில் 23 ▶



## யாழ். தொழிலதிபர் – ஈ.எஸ்.பி. நாகரத்தினத்துக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்!

யாழ்ப்பாணம், தொழிலதிபர், கல்விக்காருண்யன் லயன். ஈ.எஸ்.பி. நாகரத்தினத்துக்கு கொழும்புப் பல்கலைக்கழகம், கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி 23 ▶



## யாழ்.முற்றவெளியில் – 'விடுதலைப் பொங்கல்'

யாழ்ப்பாணம், ஜன.14

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, 'விடுதலைப் பொங்கல்' என்ற பெயரில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்று பொங்கல் நிகழ்வு நடைபெற்றது.

சிறைக் கூண்டு போன்ற மாதிரி வடிவமைக்கப்பட்டு அதற்குள் பொங்கல் பொங்கி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. 23 ▶



## புதைந்த நிலையில் 2 உழவியந்திரங்கள்!
அகழ்வு தற்காலிகமாக நிறுத்தம்

முல்லைத்தீவு, ஜன. 14

முல்லைத்தீவு, புதுமாத்தளன் கடற்கரைப் பகுதியில் புதையுண்டநிலையில் இரு உழவியந்திரங்கள் இருப்பது கண்டறியப்பட் 23 ▶

## நேற்று மின்தடை!

கொழும்பு, ஜன. 14

நாட்டின் பல பகுதிகளில் நேற்று மின் தடை ஏற்பட்டதாக மின்சாரசபை அறிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் வழங்கப்படாமையே 23 ▶




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொங்கல் வியாபாரம் வடக்கில் 'சுமார்'



யாழ்ப்பாணம்,ஜன.14
யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் வியாபார நடவடிக்கைகள் எதிர்பார்த்தளவு இடம்பெறவில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் பெரும் சந்தையான திருநெல்வேலியில் வியாபாரிகள் வழமைபோன்று பொருள்களைக் குவித்துள்ள போதும், அவற்றைக் கொள்வனவு செய்வோரைப் பெரிதும் காண முடியவில்லை.
கடந்த கால வியாபாரத்தைப்போன்று இம்முறை பொங்கல் வியாபாரம் இடம்பெறவில்லை. விலையேற்றம் மற்றும் பொருள்களுக்கான தட்டுப்பாடு காரணமாக மக்கள் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் இம்முறை ஒன்லைன் முறையில் பொங்கலுக்குரிய பொருள்கள் சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டதால், அநேகமானோர் ஒன்லைனில் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். (ஒ-4-இ)

யாழ்ப்பாணம்,ஜன.14
யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் தைப்பொங்கலை முன்னிட்டு, வியாபார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ள நிலையில், மானிப்பாயிலும் அதிகளவு விற்பனை நிலையங்கள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளன. மானிப்பாய் சந்தைப் பகுதியில் மண்பானைகள், அலுமினியப் பானைகள் 400 ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன.
அத்துடன் கரும்பு, பட்டாசுகள் என பொங்கலுக்குரிய பொருள்கள் அநேகமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ஒ-4,125)





வவுனியா.ஜன.14
தைப்பொங்கலை முன்னிட்டு,வவுனியாவில் பொங்கல் வியாபாரம் நேற்றுக் களைகட்டியது. வவுனியா நகரப்பகுதியில் பொங்கலுக்குத் தேவையான பொருள்கள் அதிகளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. எனினும் கடந்த வருடத்தை விட இந்த முறை குறைந்தளவு மக்களே பொங்கல் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர் என்று வவுனியா வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ம-4,18)



கொடிகாமம் பொதுச்சந்தையில், தைப்பொங்கலை முன்னிட்டு, வியாபார நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெற்றன. (ம-4-159)

## ஆமைகளுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.14
4 கடலாமைகளை வாகனத்தில் கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.
இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த வாகனம் மறிக்கப்பட்ட சோதனையிடப்பட்டது.
இதன்போது 4 கடலாமைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றைக் கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஒ-4,20)

## சதொசவில் அரிசி விற்பனை



கொழும்பு. ஜன.14
நாட்டரிசி ஒரு கிலோ 100 ரூபாவுக்கு குறைவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோ 130 ரூபாவுக்கு குறைவாகவும் விற்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட அரச விற்பனை நிலையங்களினூடாக, இந்த விலை அடிப்படையில் அரிசியை பொதுமக்களால் கொள்வனவு செய்ய முடியும் என்றும் வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ரயில் பொறுப்பதிகாரிகள் 24 மணிநேரப் போராட்டம்

கொழும்பு. ஜன.14
இலங்கை ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளது. முன்னறிவிப்பு இன்றி பல நீண்ட தூர ரயில் சேவைகளை ரத்துச் செய்யும் இலங்கை ரயில் திணைக்கள நிர்வாகத்தின் தீர்மானத்துக்கு எதிராகவே இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.
கொழும்பில் இருந்து பெலியத்த, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைக்கு நீண்ட தூரப் பயணங்களை ஆரம்பிக்கவுள்ளதாக இந்த வார தொடக்கத்தில் நிர்வாகம் அறிவித்து பயணச்சீட்டுகளை வழங்கியிருந்தபோதும், நேற்றுமுன்தினம் அவை ரத்துச் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டித்தே பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தால் 200 ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளன. (எ-இ)

## டெங்கு ஒழிப்புத்திட்டம்: 1,599 வீடுகள் தரிசிப்பு



யாழ்ப்பாணம், 14
தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்தில், யாழ்.மாநகர பிரதேசத்தில் கடந்த வாரத்தில் மட்டும், ஆயிரத்து 599 வீடுகள் தரிசிக்கப்பட்டன.
ஜே /81,82,84,85, 86,87 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை, சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டனர். இதன்போது 53 குடியிருப்புக் களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. போதிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத 72 குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டது. (ஒ-4,17)

## வாள்களுடன் இருவர் கைது

கிளிநொச்சி,ஜன.14
பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் வாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சிறப்பு அதிரடிபடையினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து, வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் நேற்றுமுன்தினம் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஒ-4,113)

## போதைப்பொருள்களுடன் சுதுமலைவாசி கைது

யாழ்ப்பாணம்,ஜன.14
கஞ்சா கலந்த மாவா பைக்கற்றுக்களை உடைமையில் வைத்திருந்ததுடன், அதனை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த விசேட தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். இதன்போது 30 கஞ்சா கலந்த மாவாப் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர். (ஒ-4,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன. 14
வலி.கிழக்குப் பிரதேசத்தில் கீரைச் செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, நவக்கிரி, இடைக்காடு மற்றும் புத்தூர் போன்ற பகுதிகளிலேயே கீரை அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது. அண்மையில் பெய்த மழையால் கீரை செய்கை பாதிக்கப்பட்டு, அதன் விலையும் அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-17)



கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளியிலுள்ள 22 சனசமூக நிலையங்களுக்கு, பிரதேச சபையால் 10 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது. நிதியுதவிக்கான காசோலைகளை பிரதேசசபையின் உபதவிசாளர் முத்துக்குமார்கஜன்.குறித்த சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினரிடம் கையளித்தார். (ம-ரி1-13)

### யாழ்.மாநகரில்

## கடந்த வருடத்தில் 91 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், 14
யாழ்.மாநகரப் பிரதேசத்தில் கடந்த வருடத்தில் மட்டும் 91 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இவர்களில் கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் ஆகக்கூடுலாக 80 பேர் வரை டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜனவரிமாதம் ஒருவரும், பெப்ரவரி மாதம் ஒருவரும், மார்ச்மாதம் மூன்று பேரும், ஏப்ரல்மாதம் மூன்று பேரும், மேமாதம் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜூன் மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் எவருக்கும் டெங்குப் பாதிப்பு ஏற்படவில்லை. நவம்பர் மாதம் இருவரும் பாதிக்கப்பட்டனர். (ஒ-4-17)




அனைத்து உள்ளங்களிலும் அன்பும் ஆனந்தமும் பொங்கட்டும்

புதிய அபிலாஷைகளுடன் பிறக்கும் தமிழர் தைத்திருநாள் அனைவருக்கும் நோய் நொடிகளற்ற சகல வளங்களையும் செல்வங்களையும் நல்கி தேசத்தினை வளம் பெறச் செய்யட்டும்.

இலங்கை வங்கியின் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த 5ஆம் திகதி ( புதன்கிழமை) நடைபெற்றது. பச்சிலைப்பள்ளி கமக்கார அமைப்புகள் மற்றும் கமநல சேவைக் குழுவினரின் ஏற்பாட்டில், சி.செல்வராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கமநல சேவைத் திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் கலந்துகொண்டு, சித்திபெற்ற 33 மாணவர்களைக் கௌரவித்தார். (ம-ரி1-159)



யாழ்.சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இராசகோபால் பராசக்தியின் பிறந்தநாளை முன்னிட்டு, கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.01.1948

மறைவு
25.01.2021

## அமரர் சுப்பிரமணியம் கனகேஸ்வரி

திதி : துவாதசி (14.01.2022)

அன்புடனும் பாசத்துடனும்
பாதுகாத்த எங்கள் அன்பு அன்னையே
எங்கள் அனைவரையும் விட்டுப்
பிரிந்தது தான் ஏனோ
மென்மையான உள்ளம் கொண்டு
உண்மையான அன்பு தந்து
ஆசையாக எமை வளர்த்து
அறிவூட்டிய அன்பு அன்னையே
ஓராண்டுகள் ஆனதம்மா - ஆனால்
உங்கள் நிழல்கள் அழியவில்லை
ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும்
உன்னைப் போல் யாரும் இல்லை அன்னையே
நம் உள்ளத்தின் உள்ளே வாழும்
உன்னதமான அன்னையே - உங்கள்
உடல் மட்டும் தான் பிரிந்து போனது
உயிர் எம்முடன் தான் இருக்கிறது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(CS1097) (3.6)

C.C.T.M பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்

குடும்பத்தினர்
021 223 2049

# வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
**புடவை** மற்றும் **பான்சி வியாபார ஸ்தாபனத்திற்கு** அனுபவமுள்ள
பணியாளர்கள் தேவை. (பெண்கள் மட்டும்)
மல்லாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு **077 487 6656** (CS 42068) (3/6)

# திறப்புவிழா மலிவு விற்பனை

## A.V. Stores

**இல.267, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

- **தூள் உப்பு**
  400 g (கொத்துக்கு உகந்தது) - 16.00
- **குறுனல் உப்பு**
  1Kg (கறிக்கு உகந்தது) - 26.00
- **தூள் உப்பு**
  400g (மிக்சர், கடலை, பருப்பு) (கொத்துக்கு உகந்தது) - 21.00
- **உப்பு** (ஹொட்டல் கொத்து 1kg வகைகள்) - 30.50

### மொத்த விலை

- **கறி உப்பு (கட்டி)** 20kg - 490.00
- **ஹெட்டல் கறி உப்பு** - 590.00
- **ஹெட்டல் தூள் உப்பு** - 300.00
- **மிக்சர், கடலை, பருப்பு தூள் உப்பு** - 390.00

Bobbiinnroom@gmail.com
021 436 0098 (cs 42217) (2.6)

# மரண அறிவித்தல்

## திரு.தம்பாப்பிள்ளை வைரவநாதன்

**(நீர்ப்பாசன திணைக்களம்)**



பிறப்பு
20.01.1936

இறப்பு
09.01.2022

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை வைரவநாதன் கடந்த 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராஜேஷ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திரௌபதாதேவியின் அன்புக் கணவனும், காலஞ் சென்றவர்களான நாகரத்தினம், சோமசுந்தரம், இரட்ணசபாபதி ஆகியோரின் இளைய சகோதரரும், கணேஷ்வரன் (UK), மகேஷ்வரன் (UK), நளினி (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானேஸ் (UK), டுஷ்ஷந்தி (UK), பாஸ்கரன் (கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹறிணி, தனுஷன், சரண்யா, பிரித்திவ், சிவகாமி, ரந்திவ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், ராகவி - வினோஜன், பார்கவி, ப்ரகவி, ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை (15.01.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 5.00மணிவரை வைக்கப்பட்டு, மீண்டும் மறுநாள் காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4.00 மணியளவில் தகனத்திற்காக பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

20, Suvisuddharama Road,
Colombo - 6

தகவல்:
குடும்பத்தினர்

(cs37343) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்




மகிழ்ச்சியும் செல்வமும்
என்றும் நிறைவாய்ப் பொங்கிடட்டும்

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்


# இனத்துக்காக சிறைப்பட்டவர்கள் விடுதலைபெறப் பிரார்த்திப்போம்!

பொங்கல் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்து



தீராத நோய்கள் அகலவும், சிறைக் கூடங்களில் தமிழ்மொழிக்காகவும், எம் இனத்துக்காகவும் வாழும் வயதில் வாடி நிற்பவர்கள் விடுதலை பெற்று, விடிவுபெற உருக்கமாகப் பிரார்த்திப்போம் என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப் பிட்டுள்ளார் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன்.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. சைவத் தமிழர் பண்பாட்டில் தைப்பொங்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். இயற்கைத் தெய்வமாகிய சூரியனைக் கண்கண்ட தெய்வமாக வணங்குபவர்கள் தமிழர்கள்.


வீடுவிடிய வேண்டும், நாடு விடிய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வதற்காகப் பொங்கிப் படைக்கும் திருநாள் தைப் பொங்கலாகும்.

பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி செலுத்தும் இந்தத் திருநாளில் அனைவரும் ஒன்றுபட்டு வழிபாடு செய்வோம். இயற்கை வளம் செழிக்க வேண்டும், அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும், தர்மம் நிலைக்க வேண்டும் என நாம் கடவுளிடம் மன்றாட வேண்டிய திருநாள் தைப்பொங்கல் ஆகும். எம் மண்ணில் நீதியான வாழ்வு கிடைக்கவும் வளங்கள் செழிக்கவும் மனதார வழிபாடு செய்வோம். ஈழத் தமிழர்களிடையே உண்மையான ஒற்றுமை உருவாகவேண்டும் என்று ஓங்கி குரல் கொடுப்போம். எமது பாரம்பரியக்கலைகள், மரபுகள் சிதைந்து விடாது பாதுகாக்க முன்வருவோம். பள்ளித் தலங்களில் கல்வியையும், ஒழுக்க பண்புகளையும் எமது தலைமுறை நிறைவாகக் கற்றுக்கொள்ள வழி செய்வோம்.

வீண்விரயைத்தை தவிர்த்து உழைப்பினால் கிடைக்கும் ஒவ்வொரு துளி வருமானத்தையும் பக்குவமாய் பயன்படுத்துவோம். தீராத நோய்கள் அகலவும், வறுமைப்பிணி அகலவும் இந்நாளில் இறைவனை மன்றாடுவோம். சிறைக் கூடங்களில் தமிழ்மொழிக்காகவும், எம் இனத்துக்காகவும் வாழும் வயதில் வாடி நிற்பவர்கள் விடுதலைபெற்று விடிவு பெற உருக்கமாக பிரார்த்திப்போம். தைப்பொங்கல் திருநாளில் அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன் - என்றுள்ளது. (ம)

# எமது கட்சியின் 'பொங்கல் பானை' தமிழ் மக்களுக்கான அமுத சுரபி

பொங்கல் வாழ்த்தில் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



வருங்காலத்தில் எமது கட்சியின் பொங்கல் பானை அமுதசுரபி போல் தமிழ் மக்கள் அனைவருக்கும் மனதாலும் திறனாலும், அன்பாலும், பண்பாலும், பணத்தாலும் அள்ளிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான சி.வி.விக்னேஸ்வரன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

தமிழர் பிரதேசங்களில் தை மாதமே அறுவடை செய்யும் மாதம். நெல் வயலில் பட்டபாட்டுக்கு விவசாயிகள் பயன்பெறும் காலம் இது.

தமிழர்களும் இதுவரைகாலம் பட்ட பாட்டுக்கு இந்த முறைப் பங்குனி மாதப் பௌர்ணமியானவர் நற்பயனை எய்தி அருளுவாராக! எமது கட்சிக்கும் பொங்கலுக்கும் ஒரு தொடர்புண்டு.

தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னம் பொங்கல் பானை. வருங்காலத்தில் எமது கட்சியின் பொங்கல் பானை அமுதசுரபி போல் தமிழ்மக்கள் அனைவருக்கும் மனதாலும், திறனாலும், அன்பாலும், பண்பாலும், பணத்தாலும் அள்ளிக் கொடுத்துக் கொண்டு இருப்பதாக! எம்மால் முடிந்ததைக் கொடுப்பதே ஒரு கட்சியின் கடமை.

கொரோனாவால் பீடிக்கப்பட்ட எமது தமிழ் அரசியல் கைதிகள் இன்றைய தினம் பொங்கல் உண்டு பொறுமையுடன் காத்திருப்பார்களாக! போரில் காணாமல் ஆக்கப்பட்ட உற்றார், உறவினரை நினைத்து வருந்தும் உறவுகள் இன்று பொங்கல் உண்டு நற்காலம்வரும் என்று எதிர்பார்த்து இருப்பார்களாக!

போரினாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு ஊரார், உறவினர் யாவரும் திரண்டு சென்று உலர் உணவுகளுடன் பொங்கலும் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துவார்களாக!

நம்பிக்கையிலேயே உலகம் சென்று கொண்டிருக்கின்றது. இந்த வருடம் தமிழர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து சூரியனுக்கு பொங்கல்இட்டு, அவன் அருளை நாடி நிற்போம் நம்பிக்கையுடன் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தித்திக்காப் பொங்கல்...!

**தை** பிறந்தால் வழிபிறக்கும் என்பர். தை பிறந்துவிட்டால் அறுவடைகள் நிகழும், உணவுப் பஞ்சம் தீரும், செல்வம் கொழிக்கும், பொருண்மியம் அதிகரிக்கும். இதனால்தான் இவ்வாறான சொலவடைகள் தமிழ்ச் சமூகத்தில் தொன்று தொட்டு இருந்தன. ஆனால், இன்றோ அந்த நம்பிக்கைகளை – எதிர்பார்ப்புகளை அர்த்தமற்றதாக ஆக்கிவிட்டுள்ளது கோத்தாபய அரசு. தை பிறந்துள்ள போதிலும் எமக்கான வழி இன்னும் பிறக்கவில்லை. இன்னும் நேரடியாகச் சொல்வதாயின் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் அந்த 'வழி' இம்மியும் தெரியவேயில்லை.

உணவு, உடை, உறையுள் என்பன மனித இருப்புக்கு அத்தியாவசியமான விடயங்களாகச் சொல்லப்படுகின்ற போதிலும், அனைத்திலும் மேம்பட்டது உணவுதான். இந்த உணவுடன் நேரடித் தொடர்பைக் கொண்டதுதான் தைத்திருநாள். புத்தரிசியில் பொங்கல் பொங்கி மகிழ்ந்திருக்க வேண்டிய இன்றைய நன்னாள் இன்று தன் ஆத்மத்தை இழந்து நிற்கின்றது என்றால் அதை எவராலும் மறுத்துரைக்க முடியாது.


கோத்தாபய அரசு, திட்டமிடாத வகையில் நடைமுறைப்படுத்திய உரக் கொள்கையால் இன்று பெரும்பாலான வயல்நிலங்கள் வறண்ட பூமியாக மாறியுள்ளன. அரிசிக்கு வரலாறு காணாத தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிவாயுவுக்கு தட்டுப்பாடு காரணமாக இன்று விறகுக்குக் கூட கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பொங்கலுக்குப் பயன்படும் இதர உணவுப் பொருள்களின் விலைகளும் உச்சம் தொட்டுள்ளன. இந்த நிலையால் ஏராளமான குடும்பங்களில் பொங்கல் என்பதே இன்று சாத்தியப்படாததாக – எட்டாக் கனியாக மாறியுள்ளது. மீதிக் குடும்பங்களில் பொங்கல் ‘சம்பிரதாயபூர்வமான’ பண்டிகையாக மாறியுள்ளது. ஆக, குறைந்தபட்சம் நிறைவான மனநிலையில் இன்றைய பொங்கலைக்கூட பொங்க முடியாதவர்களாக நாம் உள்ளோம் என்பதுதான் உண்மை.

உணவுக்கும் – செல்வத்துக்கும் – இயற்கைக்கும் அடையாளமான பொங்கல் பண்டிகை இன்று தன் சுயத்தைத் தொலைத்த நிலையில்தான் எம் வீட்டு வாசல்களை ‘அலங்கரிக்கின்றது’. தை பிறந்துவிட்டது இனி உணவுக்குப் பஞ்சம் இல்லை என்ற நிலைமாறி, இன்னும் ஓரிரு மாதங்களில் ஏற்படப் போகும் உணவுப் பற்றாக்குறை தொடர்பான எச்சரிக்கைகள் இன்று எம்மைக் கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆக மொத்தத்தில் இன்றைய பொங்கல் நாளில் பால் ததும்பும் பானைகளுக்குப் பதிலாக எம் மனங்கள்தான் பொங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பொருளாதாரப் பின்னடைவு, அத்துமீறிய விலையேற்றங்கள், அல்லல்பட்ட வாழ்வு அனைத்தும் எம்மைவிட்டு அகன்றோடி நிம்மதியும், பொருளாதாரப்பலமும் எம்மை அணைத்துக் கொள்ளவேண்டும், எம்வாழ்வில் ஆனந்தம் பொங்கிவழிய வேண்டுமென்று இன்றைய நாளில் பிரார்த்திப்போம். பொங்கலின் இன்னொரு அடையாளமே பகிர்தல்தான். இந்தப் ‘பகிர்வு’ என்னும் உயரிய பண்புதான் இன்று காலத் தேவையாக யுள்ளது. இல்லாதவர்களுடன் இன்றையநாளை – கொண்டாட்டத்தை – பொருள்களைப் பகிர்ந்துகொள்வோம். பொங்கலை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்...!

நாளொரு நல்வார்த்தை

“எல்லாப் போர்களும் முடிந்த பிறகு ஒரு பட்டாம்பூச்சி இன்னும் அழகாக இருக்கும்.”
– ரஸ்கின் பாண்ட்



# ஜனாதிபதியாவதை தடுத்தவர் பிரபாகரன்

ரணில் வெப்பியாரம்



**கொழும்பு, ஜன.14**

**2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரபாகரன்தான் என்னைத் தோற்கடித்தார் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நீங்கள் ஏன் இன்னமும் ஜனாதிபதியாக முடியாமல் இருக்கின்றீர்கள் என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். 1994 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் முடிவு மாறியது. அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் என்னைத் தோற்கடிப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனே தீவிரமாகச் செயற்பட்டார். அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் பொதுவேட்பாளர்கள்தான் களமிறங்கினர். இனிவரும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுவதா என்பது பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை - என்றார். (எ-இ)

## மின்மாற்றியை திருத்த சீனாவிலிருந்து நிபுணர்

கொழும்பு, ஜன.14

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின்நிலையத்தில் பழுதடைந்துள்ள மின்மாற்றியை ஆய்வு செய்வதற்காக சீனாவில் இருந்து நிபுணர் ஒருவர் இலங்கை வரவுள்ளார் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஜெனரேட்டரை விரைவில் சீர்செய்து 300 மெகாவாட்ஸ் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் சேர்ப்பதற்கு நம்பிக்கையுள்ளது என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மின்சார விநியோகம் தொடர்பிலான தற்போதைய நிலைமை ஓரளவுக்கு தீர்க்கப்படும். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்கு தடையின்றி நிலக்கரி விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது கையிருப்பிலுள்ள நிலக்கரி இந்த ஆண்டு மே மாதம் வரை போதுமானதாக இருக்கும்- என்றார். (எ-இ)

## இந்தியாவிடம் கடன்கோரும் இலங்கை

கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித்தவித்து வரும் இலங்கை இந்தியாவிடம் 73 ஆயிரம் கோடி ரூபா கடன் உதவியைக் கோரத் திட்டமிட்டுள்ளது என்று இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், சரக்கு இறக்குமதி செய்ய இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலர் கடன் உதவிபெற பேச்சு நடைபெற்று வருகின்றது என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

நாளை

15.01.2022
சனிக்கிழமை
தை - 02

சுபநேரம் : 03.34 - 05.04
ராகுகாலம் : 09.34 -11.04

பட்டிப்பொங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் பிரதேசசபை

## தவிசாளராக இஸ்ஸதீன்

மன்னார், ஜன. 14

மன்னார் பிரதேசசபையின் புதிய தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் எம்.ஐ.எம். இஸ்ஸதீன் தெரிவுசெய்யப்பட்டார். புதிய தவிசாளர் தெரிவு, சபையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் உறுப்பினரான எம்.ஐ. எம். இஸ்ஸதீனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதனையடுத்து, 21 உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் புதிய தவிசாளராக போட்டியின்றி இஸ்ஸதீன் தெரிவுசெய்யப்பட்டார். (த-56)

# கடந்த 10 நாள்களில் மட்டும் 29,420 சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, ஜன.14

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் 10 நாள்களில் மட்டும், 29 ஆயிரத்து 420 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.



கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் ஆயிரத்து 682 சுற்றுலாப் பயணிகளே நாட்டுக்கு வருகைதந்தனர். கொரோனாத் தொற்றின் எதிரொலியாக சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வருடத்தின் முதல் பத்து நாள்களில் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களில் அதிகளவானோர் ரஷ்யா, இந்தியா, உக்ரேன் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளனர் என்றும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)



## வழிபாட்டுக்குத் தடை

முல்லைத்தீவு, ஜன.14

தனிநபர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக, ஆலயப் பூசைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், ஆலயக் குருக்களும் வெளியேற்றப்பட்டுள்ளார். மாங்குளம், இத்திமரத்தடி சித்திவிநாயகர் ஆலயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வழிபாட்டுத் தலத்தை சிலரின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக முடக்குவது நியாயமற்றது. இந்து கலாசார அமைச்சு இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, மாங்குளத்திலுள்ள பெருமளவு மக்கள் வழிபாடு செய்கின்ற இந்த ஆலயம் மூடப்பட்டுள்ளமை தொடர்பாக, பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது. (ஒ-4-13)

## பலாலி வீதியில் வரவேற்பு பதாகை




யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்ப்பாணம் மாநகரத்தை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணம் பலாலி பிரதான வீதியில் வரவேற்பு பதாகை பொருத்தப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றின் உதவியுடன், யாழ். மாநகரசபையின் இலச்சினையுடன் இது பொருத்தப்பட்டுள்ளது. (ஒ-4-26)

## விலை நிர்ணய குழுக்கூட்டம்

மன்னார், ஜன.14

மன்னார் மாவட்ட ஒப்பந்த வேலைகளுக்கான, விலை நிர்ணயக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையிலேயே அரச ஒப்பந்த வேலைகளைச் செய்துகொள்ளமுடியும்.

கூட்டத்தில் மாவட்டச்செயலர் நந்தினி ஸ்ரான்லி டிமேல் மற்றும் பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-4-213)

## விதிமுறைகளை மீறிய உணவகங்களுக்கு பூட்டு

முல்லைத்தீவு, ஜன.14

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் 4 உணவகங்கள் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாகப் பூட்டப்பட்டுள்ளன.

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமை, அனுமதி பெற்றுக்கொள்ளாமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், உணவகங்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன.

உணவக உரிமையாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து உணவகங்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டதுடன், உணவகங்களைச் சீர்செய்து, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அனுமதி கொடுத்தால், அவற்றை மீளவும் திறக்கலாம் என்று நீதிமன்று பணித்தது. (ம-4-19)

## உணவுப்பொதிகள் வழங்கல்



முல்லைத்தீவு, ஜன. 14

வற்றாப்பளை, கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு கிராமத்தில் விபத்தில் உயிரிழந்த கிருஷ்ணசாமி மாரிமுத்து, சூரியகுமார் கரிகாலன் ஆகியோரின் குடும்பங்களுக்கு கடந்த 10 ஆம் திகதி உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

'நிக்சன்' அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில், அறக்கட்டளை சார்பில் யூட்சன், கனக தவராசா, கந்தையா சிவனேசன், மாதவன், கலைஞர் தவராசா, ரங்கன் ஆகியோர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களிடம் ஒரு வாரத்துக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். (ஒ-ரி-13)

## வவுனியா நகரில் சிரமதானம்

வவுனியா, ஜன.14

"அழகான அவுனியா நகரை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் வவுனியா நகரில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர், தனியார் பேருந்துச் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து சிரமதானத்தை முன்னெடுத்தனர்.

ஏ-9 பிரதானவீதி, பஜார் வீதி, ஹொரவப்பொத்தானைவீதி என நகரின் பல இடங்களிலும் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.



நகரசபையினர் வாகன வசதிகளை வழங்கினர். சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களுக்கான சிற்றுண்டிகள் வவுனியா வர்த்தகர் சங்கத்தினரால் வழங்கப்பட்டன. (ஒ-4-18)



## மீண்டும் மண்ணெண்ணெய் வண்டில்!

கொழும்பு, ஜன.14

எரிவாயு நெருக்கடியின் மோசமான விளைவாக, கொழும்பின் மாளிகாவத்தைப் பகுதியில் மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிச் செல்லும் மாட்டு வண்டில்களை அவதானிக்க முடிந்துள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் அரிசி மற்றும் பாண் கொள்வனவுக்காக வரிசையில் நின்ற காலத்தை இது நினைவூட்டியது.

இலங்கையிலுள்ள இரு முன்னணி எரிவாயு நிறுவனங்களும் போதியளவு எரிவாயு கையிருப்பு சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவித்த போதிலும், வரிசைகள் தொடர்கின்றன.

எரிவாயு தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சிலர் தற்போது விறகுகளைப் பயன்படுத்துகின்றனர். அத்துடன் மண்ணெண்ணெய் அடுப்புக்கும் மாறியுள்ளனர். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனைக் கண்ட பனிபோல துன்பங்கள் தூர விலகட்டும்



இன்று தைப்பொங்கல் நன்னாள். இது தமிழ் மக்களுக்கு ஓர் இனிய திருநாள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். அந்த வகையில் இற்றை நாள் வரை பட்ட கஷ்டங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகும் எல்லோரும் ஒற்றுமையாய் சுற்றத்தார் சூழ மகிழ்ந்து கொண்டாடும் மங்கலகரமான பொங்கல் இன்றாகும்.

இதயம் முழுவதும் மனமகிழ்ச்சியுடன் முகமலர்ச்சியுடன் சிரித்த முகமாக புதுப்பானையிலே புத்தரிசிப் பொங்கலிட்டு தைமகளை வரவேற்கும் மங்கலத்திருநாள் இதுவாகும்.

ஆகவே அனைத்து மக்களும் ஆனந்தம் மேலிட இனிப்பான பொங்கல் பொங்கி இன்று மகிழ்ந்திருக்க வேண்டும் என்று அருளாசிகள் வழங்கி வாழ்த்துகின்றோம்.

உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கி பொங்கும் மங்கலம் எங்கும் தங்கி சுபிட்சம் மலர வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பத்ம மலர்ப்பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி உள்ளம் மகிழ்ந்து நல்லைக் கந்தனையும் பிரார்த்தித்து மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**நல்லை ஆதீன குரு முதல்வர்,**
திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்

## போராடும் பேறு கொண்டு வா!

வறுமை வேர்விடத்
தொடங்கிவிட்டது
வயிறும் அழத்
தொடங்கிவிட்டது

பொறுமைக்கும்
எல்லை வந்தே விட்டது
பொங்கலே போராடும்
பேறு கொண்டு வா

**கே.எஸ்.சிவஞானராஜா**



# உள்ளம் நன்றியால் பொங்கட்டும்





இலங்கையிலும் புலம்பெயர்ந்து உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தமக்குரிய தனித்துவமான நன்றியின் பெருவிழாவான பொங்கல் பெருவிழாவைக் கொண்டாடும் வேளை. பொங்குக நன்றியால் பொங்குக இறைஅளித்த தரையை எண்ணி தரை அளித்த விளைவை எண்ணி பொங்குக நன்றியால் பொங்குக என்ற பாடல் மூலம் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

தொழுநோய் நீங்கிய பத்துப் பேரில் ஒருவர் மட்டும் இயேசுவிடம் வந்து அவருடைய காலில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார்.

இயேசு அவரைப் பார்த்து பத்துப் பேரின் நோயும் நீங்க வில்லையா ஏனைய ஒன்பது பேரும் எங்கே (லூக்கா 17:17) என்று கேட்டு நன்றி கூறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்.

நன்றி கூறும் நல்ல பண்பு அனைத்து மனிதருக்கும் இருக்க வேண்டிய மிகவும் தேவையான ஒன்று. ஆனால் அனேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்துவிடுகிறோம். இது அவர்கள் பணி இது அவர்கள் கடமை அவர்கள் செய்யவே வேண்டும் என்றே எண்ணுகிறோம்.

முதலில் நம்மைப் படைத்த இறைவன் எமக்கு அன்றாடம் பொழியும் வரங்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவர் என்றும் எம்மைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையுடன் அவருக்கு என்றும் நன்றியின் புகழ்பாடுவோம்.

அடுத்து நம்மோடு வாழும் மனிதர்கள் மட்டில் நன்றியாக இருப்போம். அன்புடைய பெற்றோர், அறிவூட்டும் ஆசிரியர்கள், வழிகாட்டும் குருக்கள், துணைபுரியும் உபகாரிகள் என அனைவர் மேலும் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

இயற்கையுடனும் நன்றியாக இருப்போம். மண்ணை நேசிப்போம். மரங்களை வளர்ப்போம். இறைவனை நோக்கி உங்கள் உள்ளங்கள் என்றும் நன்றியால் பொங்கட்டும் என இறையாசீர்மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**கலாநிதி ஜஸ்ரின் பேனாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை**
*யாழ் .மறைமாவட்ட ஆயர்*

எமது அன்பர்கள், அதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்



அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய தரம் குன்றாத
தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்

பொங்கல்
நல்வாழ்த்துகள்

ஸ்ரீகுமரன் நகை மாளிகை
Sree Kumaran Jewellers








74
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
021 226 4465
077 873 3482

(CR 37327) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 0777 399 480
0777225292

DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை

**அனைவருக்கும்
இனிய தைத்திருநாள்
வாழ்த்துக்கள்...**



**சிறந்ததோர் சாரதி எப்போதும்
வீதி ஒழுங்கு பற்றி விழிப்புடன் இருப்பார்.**



வட மாகாணத்தின் முதற் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

No.1
Driving Training School
In North

- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ இரவு நேர வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ தவணை முறைக் கட்டணங்கள்.
- ★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்




### கிளைக் காரியாலயங்கள்:

**யாழ்ப்பாணம்**

227/6, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம், (மதவடி அருகில்)
021 224 2022, 071 4546 956

முதலாம் கட்டைச் சந்தி,
பருத்தித்துறை.
021 226 1100, 071 4546 961

36, கச்சேரி நல்லூர் வீதி,
(கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம்.
021 222 6699, 076 722 5292

ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
021 222 6688, 071 777 6969

கண்டி வீதி, சாகவச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
021 227 0700, 071 4546 957

பிரதான வீதி, (பொலிஸ் நிலையம்
முன்பாக), நெல்லியடி.
021 300 6550, 077 474 7417

காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி.
021 225 2500, 076 212 1299

**வவுனியா**

216, ஏ9, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 0777 100 444

**மன்னார்**

94, பிரதான வீதி, மன்னார்.
023 225 1656, 077 847 2732

**கிளிநொச்சி**

ஏ9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 6955

புளியடிச்சந்தி, முல்லை வீதி,
விசுவமடு.
021 320 1515, 077 8585 263

வாடியடி சந்தி, பூநகரி.
021 320 1818, 070 333 7171

(CR 35888) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




# செல்வி நகைஅகம்

# CHELVI Nakai Agam

தங்கப்பவுண் நகை வியாபாரம் Manufacturers of Gold Jewels



22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

T.P: 021 222 9441

1/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Kasthuriar Road, Jaffna.

# REGISTER NOW !

Hotline 0710 770 770, 0717 140 000

Registorad with TVEC TERTIARY AND VOCATIONAL EDUCATIN COMMISSION
Approved by: Foreign Ministry

நிச்சயமான தொழிலை இலக்காகக் கொண்ட பாட நெறி

O/L பின் SCHOOL OF NURSING

ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி



உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலை வாய்ப்புக்கள் அதிகளவில் பெற்றுத் தர ஒரே ஒரு தாதியர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனார் நுளைவுக்கான அடிப்படைத் தகைமைகள்

- க.பொ.த. சா/த 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
- உயரம் 4அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 16 – 30 நகு இடைப்பட்டிருத்தல்.

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு TVEC நிறுவனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக.....

A/L பின் MEDICAL LABORATORY TECHNOLOGY ASSISTANT ஆய்வுகூட உதவியாளர் பயிற்சி நெறி

க.பொ.த. உயரதர விஞ்ஞான பாடத்திற்கு தோற்றிய நீங்களும், இப்பொழுது ஆய்வுகூட உதவியாளராகலாம்.



பிரதான காரியாலயம்

## அய்வா தாதியர் பாடசாலை

PV 114302

28, பார் வீதி, மட்டக்களப்பு 071 872 2353, 065 222 9666

Web : www.myhopegroup.com E-mail : nadheer1976@yahoo.com

கிளைகள்

| திருகோணமலை | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு |
|---|---|---|
| 203, பிரதான வீதி, திருகோணமலை 071 992 6681 | 154, A/12, 2ம் மாடி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 071 872 2350, 071 770 770 | P.W.D Road, Vannankulam, Mullaititu. 077 171 0172, 075 286 8472 071 872 2352 |

wahts app மூலமும் தகவலைப் பெற்றுக் கொள்ளலாம். 0717 140 000

அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

# விக்கி லேணர்ஸ்

# Vikki Learners

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சி பாடசாலை






- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 268 K.K.S. வீதி, யாழ்ப்பாணம் 076 536 0444 | அந்தோனியார் கோவில் முன் மானிப்பாய் 077 291 8444 | 136/1, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தி திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 076 271 8444 | K.K.S. வீதி, சுன்னாகம். 077 692 7703 | கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 076 560 6444 |

T.P:077 830 8360 / 021 722 3201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வேணவா நிறைவேறட்டும்!

## ஈசான சிவ சக்திகிரீவன் பொங்கல் வாழ்த்து

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கேற்ப தமிழ் மக்கள் நீண்ட வெகுநாள் விருப்புகளை எல்லாம் பெற்று ஏனைய சமூகத்தோடு சரிநிகர் சமமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும் என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

உலக இயக்கத்துக்கு மூலகாரணமாக விளங்கும் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவித்து பொங்கல் திருநாளில் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி இந்த முதுமொழிக்கேற்ப தமிழ் மக்கள் நீண்ட வெகுநாள் விருப்புகளை எல்லாம் பெற்று ஏனைய சமூகத்தோடு சரிநிகர் சமமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும்.

பல்வேறு துன்பங்களைக் கடந்த காலத்தில் அனுபவித்த மக்களின் உரிமைக்கான குரல் வலுப்பெற்று உலக அரங்கில் கௌரவமாக வாழும் தனித்துவத்தை பெறுவதோடு பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் மனநிறைவு பெறக்கூடிய நீதியான தீர்வைப் பெற்று வாழ வழிபிறக்கட்டும்.

சூரிய பகவான் தன்னை வழிபடுவோரையும், வழிபடாதோரையும் தம் ஒளிக்கீற்றை சமமாக வீசிக்காப்பாற்றுவது போல நாமும் நன்மை தீமைகளுக்கப்பால் சென்று உலகுக்கு நல்ல காரியங்களைச் செய்திட சங்கல்பம் பூணுவோமாக. உலகை அச்சுறுத்தும் கொரோனாவிலிருந்து விடுபட்டு அனைவரும் சகல நலங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல ஆடல் வல்லானைப் பிரார்த்திப்போமாக - என்றுள்ளது. (ம-ரி1)

# உள்ளங்களில் இன்பம் பொங்கட்டும்



பொங்கலோ பொங்கல் என்று எங்கெங்கும் குரல் ஒலிக்கும் பொங்கல் திருநாள் பிறந்து விட்டது.

கிராமங்களில், வயல்களில் எல்லாம் செந்நெல் தலைசாய்ந்து களி நடனம் புரியும் காட்சியைக் கண்டு உழவர் பெருமக்களின் உள்ளங்களிலெல்லாம் கரைகாணாத மகிழ்ச்சி பொங்கி வழிகிறது.

ஏதேனும் சுபமான ஒரு செய்தியைக் கேட்க வேண்டுமென்றால் பொதுவாக 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். அதாவது எத்தனை பிரச்சினைகள், தொல்லைகள் இருந்து வந்தாலும் தை மாதம் பிறந்தால் அவை அத்தனையும் விலகி மகிழ்ச்சி கிடைக்கும் என்பதே அதன் பொருளாகும். இவ்வாறாக இல்லங்களிலெல்லாம் பால் பொங்க நல்லோர் தம் உள்ளங்களிலெல்லாம் இன்பம் பொங்க வைக்கும் நற்றமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளை பூரிப்புடன் வரவேற்று மகிழ்ந்து புத்துணர்வு பெறுவோமாக.

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகர்**
இந்துமத குருபீடாதிபதி, பிரதமகுரு,
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

# 'பொங்கும் மங்கலம் எங்கும் நிலைக்கட்டும்'

இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழர்களின் பொன்னான பெருநாள். நெல் விளையக் கதிர் பரப்பிய கதிரவனுக்கு நன்றி செலுத்திடும் நல்லதொரு பொன்னிலும் இனிய நன்னாள்.

இந்த நல்ல நாளிலே புதுப்பானையிலே புத்தரிசிப் பொங்கல் பொங்கி தேன், முந்திரிப்பருப்பு, திராட்சை வற்றல், கற்கண்டு நெய் எல்லாம் சேர்த்து இனிப்புப் பொங்கல் பொங்கிப் படைத்து மகிழ்வோம்.

அனைத்து மக்களும் ஆனந்தமாய் வாழ வழி பிறக்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து இன்று தை பிறந்திருக்கின்றது.

நமக்கு நன்கு வாழ்வதற்கு வழி பிறந்திருக்கின்றது என்று மனமகிழ்வுடனே சூரியனைப் பணிந்து வணங்கி வாழ்த்தி வழிபாடாற்றி நிற்போமாக.

**'கலாபூஷணம்' இராசையா ஸ்ரீதரன்**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொங்கலே நீ பொங்கி வா!



ஏர் பூட்டி உழுது பயிர் நாட்டி
கண்கண்ட தெய்வம்
கதிரவனின் துணையாலே
பாரினில் மன்னர் தொடக்கம் மக்கள் வரை
பசியினைப் போக்கிட வழிசமைக்கும்
உழைக்கும் வர்க்கத்தின் உயர்வை
உணர்த்தும் பொன்னாள்
கதிரவனுக்கு நன்றி செலுத்தும் நன்னாள்

புத்தம் புதிய பானை தனில் அறுவடை
புத்தரிசியிட்டுப் பொங்கிடும் திருநாள்
உழவர் திருநாள் மட்டுமல்ல
உறவினர் மகிழ் திருநாள்
பண்டைய தமிழ் கலாசாரப் பண்பாடு
பண்புடனே இன்று வரை தொடர்கிறது
தமிழர் தம் வாழ்வு திறந்திட
இனியவையாக எல்லாம் நம் நாட்டில் நடந்திட
பொங்கலே நீ பொங்கி வா

நயினை விசு. இராசநாயகம்

---

# உதயனுக்கு பெருநாள் உழவர் திருநாள்



உழுதுண்டு வாழ்பவர் மட்டுமே உண்மையாய்
வாழ்கின்றவர் என்றே மற்றோர்
தொழுதுண்டு அவர்பின்னே செல்பவர் என்றார்
வள்ளுவனார் அன்றே
விழுதாகி உலகெனும் விருட்சத்தை தாங்குவது
உழவுத்தொழில் ஒன்றே என்றும்
முழுமுதல் கடவுளாய் உணவிடும் உழவனையே
தொழுதிடுதல் நன்றே

மழையையும் மண்ணையும் நம்பிடும் உழவர்
வருடத்தில் ஒருநாள் அந்த
மழையினைத் தந்திடும் கதிரவன் கருணைக்கு
காணிக்கை தரும்நாள்
உழைப்பின்நற் பயனுக்கு உறுதுணை யானஎம்
உதயனுக்கு பெருநாள் - இதுவே
உலகத்தோர் அனைவரும் போற்றும் தைப் பொங்கல்
எனுமுழவர் திருநாள்

செங்கதிரும் மழையும் சிந்திய வியர்வையும்
செந்நெல்லாய் விளைந்து - தாம்
வணங்கிய தெய்வமும் வழங்கிய உயர்வையும்
வரங்களாய் நினைந்து
பங்கயனால் பெற்ற பயன்கள் யாவிற்கும்
நன்றியினைப் பகர்ந்து பொங்கல்
பொங்கியே படைக்கும் பெருநாளாம் உழவர்
திருநாளாய் மலர்ந்து

உழுது பண்படுத்தி உடல்வருத்தி வயல்திருத்தி
உயர்ரகநெல் விதைத்து வான்
மழையும் கதிரவனால் தேன்மாரி பொழிந்து
பயிர்விளைய வழியமைத்து பயிர்
முளைத்துயர களையகற்றி முழுப்பயிராய் வளரவைத்து
புதிரெடுத்து கதிரறுத்து
மலையெனநெல் மணிகுவித்து வளம்பெருக வைத்தசெங்
கதிரவனைப் பூசித்து
விளைந்தநெல் அரிசியிலே வெல்லமுடன் பாலுமிட்டு
பொங்கலாக்கிப் படைத்து - நம்
உழவரித் திருநாளில் உளம்மகிழ்வார் நன்றிமிகு
உணர்வினை அர்ப்பணித்து

இனமிது மதமிது மொழியிது என்னும்
பேதங்களைக் களைந்து மனித
இனமிது எனுமுயர்ந்த குணமது கொண்டோராய்
பெருநிலை அடைந்து
மனமது ஒன்றிய மானுடம் நிறைந்த
மாந்தராய்த் திகழ்ந்து உழவர்
தினமிதில் மடமை பேதமை களைந்து
வாழ்ந்திடுவோம் மகிழ்ந்து

டே.த.எட்வின் உடுவில்

---

# மங்காத கீர்த்தியை தரட்டும் தைப்பொங்கல் திருநாள்



■ மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

வருடத்திலே முதலாவது மாதம் தை மாதம். தை மாதம் முதல் தேதியை மகர சங்கராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென்திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தை முதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணிய காலம் என்றும் சுப கருமங்கள் மங்கல காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகின்றது.

## பொங்கல் திருநாள் நிகழ்வுகள்

பொங்கல் திருநாளில் சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்துவிடுவர். நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வர். வீட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுரமான பகுதியை வெள்ளைசிவப்பு நிற மாவினால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக் கொள்வர். மலை வாழை, கமுகு, கரும்பு மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர். அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றி பூரண கும்பம் வைத்து பழங்கள், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலிய மங்கலப் பொருள்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைத்து இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திப்பர்.

நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப்பானையைத் திருவணையில் வைத்து அதன் வாய்ப் பகுதியில் மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்திக் கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்து திரிபுண்ட ரமாக மூன்று இடங்களில் பூசி, சந்தனம், குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசுப்பாலும் நீரும் விட்டு நிரப்பி தூப தீபம் காட்டி கற்பூர தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கிப் பற்ற வைத்து கணவனும், மனைவியும் ஒருமித்த சிந்தையராய் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைத்து பானையைப் பக்குவமாய் இருவரும் தம் கைகளால் பற்றிப் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர். இதில் குடும்பத்தவர் யாவரும் இணைந்து கொள்வர்.

## பொங்கலோ பொங்கல்

பானையில் பால் பொங்கி எழும்போது பொங்கலோ பொங்கல் என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாக வேனும் கிழக்கு முகமாக வேனும் ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளினால் அதனை நன் நிமித்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர். அதன் பின்னர் குடும்பத்தலைவர் புது நெல்லில் குற்றியெடுத்த பச்சரிசியை தம் இரு கைகளாலும் அள்ளி சூரிய பகவானை வழிபட்ட வண்ணம் பானையில் வாய் விளிம்பினை மும்முறை சுற்றி பானையுள் இடுவர். தொடர்ந்து குடும்பத் தலைவி, குடும்பப் பெரியவர்கள், பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இடுவர். வெல்லம், கற்கண்டு, நெய், தேன், பயற்றம் பருப்பு என்பனவற்றைப் பாலுடன் கலந்து விட்டு தித்திக்கும் இனிய பொங்கலை ஆக்குவர்.

## வழிபாடு

பொங்கிய அமுதினை மூன்று தலை வாழையிலைகளில் படைத்து பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள் முதலியவற்றைக் கொண்டு மடை பரவி, தேங்காய் உடைத்து வைத்து, நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து தூப தீபம் காட்டி பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்து சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர்.

## சூரியனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு

பூமியிலே மழை அத்தியவசியமாகத் தேவை. நீரின்றி இந்த உலகம் இயங்காது. மழையைத் தருவது சூரியன். வெப்பமும் ஒளியும், உயிர்ப்புச் சூரியனாலேயே அனைத்துச் சீவராசிகளுக்கும் வழங்கப்படுகிறது. இன்னார் இனியார், உயர்வு தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தை முதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டுகிறது. ■

---

# பொங்கலோ பொங்கல்

பொங்கலோ பொங்கல்
புனிதமான பொங்கல்
பொறுமை தந்திடும்
புதிய பானைப் பொங்கல்
கொரோனா என்ற
கொடுமை வந்த போதும்
கொதித்திடாது பொங்கிடுவோம்

மாக்கோலம் போட்டு
[illegible]
[illegible]
நிறைவுடனே பொங்கிடுவோம்
உதயமாகும் உதயனுக்கு

உள்ளம் குளிரப் படைத்திடுவோம்
படையலிலே பழங்களுடன்
பலகாரமும் சேர்த்திடுவோம்

சர்க்கரைப் பொங்கலதை
சந்தோமாகப் படைத்து
பட்டாசு படபடக்க
கற்பூர ஆராத்தி கொண்டு
கண்மூடி முடித்திடுவோம்
[illegible] மகிழ்வுடன்
சுகமே உண்டு மகிழ்வோம்

புவனேஸ்வரி சிவபாலன்



# பொங்கிடு பாலே பொங்கு

பொங்கிடு பாலே பொங்கு மங்கலம்
தங்கிடப் பாலே பொங்கு
உழவர் உயர்வுறப் பாலே பொங்கு
பஞ்சம் பறந்திடப் பாலே பொங்கு
கொரோனா ஒழிந்திடப் பாலே பொங்கு
தீர்வு பிறந்திடப் பாலே பொங்கு
பொங்கிடு பாலே பொங்கு மங்கலம்
தங்கிடப் பாலே பொங்கு

ப.மகேந்திரதாசன் நாயன்மார்கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை விவசாயத்தை நோக்கி பயணப்பட வேண்டும் நாம்

## பொங்கல் வாழ்த்தில் ஜனாதிபதி அழைப்பு



இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணம், பசுமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். இது, பசுமை விவசாயத்துக்கான தேசிய கொள்கைக்குப் பலன் தரும் என்பதே பெரும்பான்மையானோரின் நம்பிக்கையாக இருக்கின்றது - என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

விவசாயம் செழிப்படையக் காரணமான சூரிய பகவானுக்கு நன்றி நவிலும் தைப்பொங்கல் தினம், இந்துக்களின் சிறப்புமிக்க கலாசாரம் மற்றும் மதரீதியிலான பண்டிகையாக விளங்குகின்றது. உலகவாழ் இந்துக்களுடன் இணைந்து இப்பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர இந்து மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தைப்பொங்கல் தினம் பாரம்பரியக் கொண்டாட்டங்களைக் கலாசார ரீதியாகச் சிறப்பாகக் கொண்டாடுவதன் மூலம், எதிர்காலத்தில் வளமான பயிர் அறுவடைக்கு சூரிய பகவானின் ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் கிடைக்கின்றன என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

சுபீட்சத்துக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடும் வகையில் இந்துக்களினால் முன்னெடுக்கப்படும் சடங்குகள், காலங்காலமாக இலங்கைச் சமூகத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்துடன் இணைந்த அனைத்து இலங்கையர்களும், தைப்பொங்கல் தினத்தை மிகுந்த மரியாதையுடன் எதிர்பார்க்கின்றனர்.

இந்த வருடமும், சுகாதாரத் துறையின் ஆலோசனைப்படி உங்களதும் உங்கள் அன்புக்குரியவர்களதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே தைப்பொங்கலை அனைவரும் கொண்டாட வேண்டும் - என்றுள்ளது. (ம)

# ஒன்றிணைந்து பயணிப்போம்

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மஹிந்த



தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இந்தத் தைத்திருநாளானது இன மத பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்தமாற்றம் எம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டுமென்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

பண்டைய காலந்தொட்டு உலக சமுதாயம் பலவற்றாலும் கொண்டாடப்பட்ட ஒரு விழா அறுவடை விழா. இதுவே உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கான அடிப்படையாகும்.

உழவர் பெருமக்கள் தங்களின் கடின உழைப்புக்கு பயன் நல்கிய இயற்கைக்கு, தமது நன்றியுணர்வைத் தெரிவிக்கும் திருநாளாக இத்தைத்திருநாள் விளங்குகின்றது. அதனால் இத்தைப்பொங்கல் திருநாளிலே அனைவரும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றனர். இயற்கையின் பெருமைக்கு முக்கியத்துவம் நல்கும் இத்திருவிழா, நன்றி மறவாத உன்னத பண்பை நம் அனைவருக்கும் எடுத்தியம்பி நிற்கிறது.

இனம், மதம், மொழி ஆகியவற்றால் எம் தேசம் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்று சொல்வதிலே பெருமை கொள்வோம். நம் அனைவரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஒன்றாக அமைவதே இந்தத் தேசத்தின் சுபீட்சத்துக்கான அத்திவாரம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற உன்னத இலட்சியத்துடன் இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இலங்கையில் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இத்தைத்திருநாளானது இன மத பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலரவேண்டும் -என்றுள்ளது. (ம)

# இயற்கையோடு இன்னுமின்னும் நெருங்கவேண்டிய தேவையுண்டு

## சஜித் பொங்கல் வாழ்த்து



இயற்கையோடு இன்னுமின்னும் நெருங்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கும் இக்காலகட்டத்தில், இயற்கையோடு இணைந்த தைப்பொங்கல் போன்ற கலாசார வைபவங்கள் அவசியப்படுகின்றமை நிதர்சனமே இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.


அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

விவசாயம் சார் சமூக கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்து சமூகம், செழிப்பான புத்தாண்டில் தனது முதல் அறுவடையை சூரியபகவானுக்கு பூஜிப்பதை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகின்ற இந்த பண்டிகையானது, பரம்பரை பரம்பரையாக இந்து மக்கள் மிக கௌரவமாகக கொண்டாடி வருகின்ற வைபவமாகும்.

மனிதர்கள், விலங்குகள் மற்றும் இயற்கையின் மீது அன்பு, கருணை செலுத்துவதை தமது ஒரே நோக்கமாகக் கொண்டு உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் இந்த பண்டிகை கொண்டாடப்படுகின்றது. தைப்பொங்கலை மனிதர்களுக்கிடையேயான நட்புறவை வளர்ப்பதற்கான மற்றும் பரஸ்பர புரிதலுக்கான வாய்ப்பாக அறிமுகப்படுத்தலாம்.

அத்தோடு இயற்கையோடு இன்னுமின்னும் நெருங்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கும் இக்காலகட்டத்தில், இயற்கையோடு இணைந்த தைப்பொங்கல் போன்ற கலாசார வைபவங்கள் அவசியப்படுகின்றமை நிதர்சனமே.

மனித சமூகத்துக்கு இடையில் சுமுகமான தொடர்பை ஏற்படுத்துவதற்கு துணையாக அமைகின்ற இவ்வகையான அற்புதமான வைபவங்களின் முக்கியத்துவம் அற்பமானதல்ல. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இயற்கைக்கு மரியாதை செலுத்தும் பக்தி மற்றும் மகிழ்ச்சியாக அமையக்கூடிய தைத் திருநாளாக இத்தினம் அமைய எனது வாழ்த்துக்கள் - என்றுள்ளது. (ம)



# புதிய எதிர்பார்ப்புக்களுடன் பொங்கலை எதிர்கொள்வோம்

## சபாநாயகர் வாழ்த்து

தைப்பொங்கல் திருநாளின் ஊடாக எமக்கு வழங்கப்படும் முக்கிய செய்தி என்னவெனில், கடந்த வருடத்தில் எம்மால் இழைக்கப்பட்ட தவறுகளிலிருந்து திருந்தி புதிய எதிர்பார்ப்புக்களுடன் புத்தாண்டை அணுகுங்கள்.

இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இறைவன்மீதும் இயற்கை மீதும் மிகுந்த ஈடுபாட்டைக் கொண்ட எமது சகோதர தமிழ் சமூகத்தினர் வாழ்வில் எவ்வாறான இன்னல்கள், கவலைகளுக்கு முகங்கொடுத்திருந்தாலும் அவற்றுக்கும் மத்தியில் தைத்திருநாளை நிச்சயம் கொண்டாடுவார்கள். தமது வயல்களில் விளைந்த புதிய நெற்கதிர்களை அறுவடை செய்வதற்கு தாம் நம்பும் சூரியக் கடவுள் உள்ளிட்ட ஏனைய கடவுளருக்கு நன்றி செலுத்துவதை தமது மரியாதைக்குரிய கடமையாக அவர்கள் கருதுகின்றனர். தமது பயிர்கள் வளர்வதற்கு சூரியக் கடவுளின் பங்களிப்பு, அதனை வளப்படுத்துவதற்கு மழை வழங்கிய பங்களிப்பு, மாடு போன்ற கால்நடைகளுக்கு நன்றி தெரிவிப்பது தைப்பொங்கல் திருநாளின் நோக்கமாகும்.

அத்துடன், பல்லாயிரம் ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வரும் அற்புதமான தைப்பொங்கல் திருநாள் தமிழ் சகோதர சகோதரிகளுக்கு மாத்திரம் காலத்தால் அழியாத செய்திகளையும் அறிவுரைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. தைப்பொங்கல் திருநாளின் ஊடாக எமக்கு வழங்கப்படும் முக்கிய செய்தி என்னவெனில், கடந்த வருடத்தில் எம்மால் இழைக்கப்பட்ட தவறுகளிலிருந்து திருந்தி புதிய எதிர்பார்ப்புக்களுடன் புத்தாண்டை அணுகுங்கள் என்பதாகும். தைத்திருநாளுக்கு முன்னர் பழைய வருடத்தில் அவர்கள் கொண்டாடும் திருநாள் போகிப் பொங்கலாகும்.

பிறந்திருக்கும் தைத்திருநாள் இன பேதங்கள் இன்றி, நாடு முழுவதும் பொங்கல் வழங்கி, கருணை உள்ளத்துடன், ஒத்துழைப்பு, சமத்துவத்துடன் தற்போதைய கொரோனாத் தொற்றிலிருந்து விடுபடும் வளமான நாளையாக அமையட்டும்- என்றுள்ளது. (ம)



# அனைவருடனும் இணைந்து பொங்கலை கொண்டாடுவோம்

## வடக்கு ஆளுநர் பொங்கல் வாழ்த்து

தமிழர் திருநாளாம் தைத்திருநாளை நாம் இன்று கொண்டாடுகின்ற அதேவேளை, இந்தப் பண்டிகையை கொண்டாட முடியாமல் இருப்பவர்களையும் இன்று எமது பிரார்த்தனைகளில் இணைப்போம் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிறியதோ பெரியதோ எவ்வாறிருப்பினும் பாரம்பரிய பண்டிகைகள் கொண்டாடப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அனைவருக்கும்
தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!



LIC Life Insurance Corporation (Lanka) Ltd.
உங்கள் வாழ்க்கைக்கான உயிரோட்டம்

29/2, விசாகா வீதி, கொழும்பு 04, இலங்கை.
தொலைபேசி எண் : +94 2552277, +94 2553577-8, +94 2554411,
தொலைநகல் : +94 2590495,
www.liclanka.com

# தமிழராட்சி தழைத்திட ஒன்றுபட்டு பொங்குவோம்

## மாவை பொங்கல் வாழ்த்து

தை பிறந்தால் வழிபிறக்கும் என்று புதிய நம்பிக்கை கொண்டு தமிழர் தாயக நிலத்தில் தமிழராட்சி தழைத்திட நாமெல்லாம் ஒன்றுபட்டு, திடசங்கற்பம் கொண்டு பொங்கிடுவோம் என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ.சேனாதிராசா. அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஆண்டுதோறும் மழையும் நீர்நிலையும் நிலவளமும் நெல்விளைச்சலும் மார்கழியில் நிறைந்து அறுவடையின் பின் தைபிறக்கும் காலம், தைத்திங்களில் குடிகளில் செல்வம் நிறைவதால், வழமையின் அடையாளமாகத்தான் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பர்.

ஆனால் இன்று வரப்புயர, நீர் உயர, நெல் உயர கோன் உயரவில்லை, குடி உயரவில்லை, விளைச்சலில்லை, செல்வம் திரளவில்லை. பசியும் பட்டினியும் உயிர்களைக் காவு கொள்ளும்



கொரோனா ஊழிக் கொடு நோய் பரவலும் கோனில்லாக் குடிகளாய் உயிருக்காய் போராடும் காலமாய் மக்கள் வீழ்ந்து கிடக்கின்றனர்.

அதிலும் இலங்கைத் தமிழர் விடுதலையின்றி அடிமைத்தளை அறுக்கப் போராடி மடியும் மக்களாய் ஆட்சி இன்றி, ஆளும் நிலமின்றி, வாழும் உரிமையற்று விடிவின்றி, புத்தரிசிப் பொங்கலின்றி இதயம் பொங்காத ஏதிலிகளாய் வீழ்ந்து கிடக்கின்றோம். தை பிறந்தால் வழிபிறக்கும் என்று புதிய நம்பிக்கைகொண்டு தமிழர் தாயக நிலத்தில் தமிழராட்சி தழைத்திட நாமெல்லாம் ஒன்றுபட்டு, திடசங்கற்பம் கொண்டு பொங்கிடுவோம் - என்றுள்ளது. (ம)

# விலையேற்றம் எனும் துன்பம் அகலட்டும்

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஈ.சரவணபவன் தெரிவிப்பு



சராசரியான வருமானம் உள்ளவர்களுக்கும், நடுத்தரப் பொருண்மியம் கொண்டவர்களுக்கும் வாழ முடியாத நாடாக இந்த நாடு மாறிக் கொண்டிருக்கின்றது.

இந்த அவல நிலைமாறி அனைவரும் நிலைபேறான - சுபீட்சமான வாழ்வுவாழ பிறந்திருக்கும் தைத் திருநாள் வழிவகைகளை புரியட்டும் என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன்.

தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இப்படியிருக்கையில் கோத்தாபய அரசு வலிந்து ஏற்படுத்திய பொருண்மியச் சிக்கல், உணவுப் பற்றாக்குறை, அதீத கடன்பொறி, அந்நியச் செலாவணி இருப்பின்மை, டொலர் பற்றாக்குறை, தீராத விலையேற்றங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து வெந்த புண்ணில் வேலாக இன்று எம்மை வதைத்தெறிந்து கொண்டிருக்கின்றன.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது எமது முன்னோர் எமக்குச் சொல்லித்தந்த நம்பிக்கைக்கூற்று. அந்த ஒற்றை நம்பிக்கையில்தான் இன்றைய பண்டிகையை நாம் கொண்டாடுகின்றோம். எம் அத்தனை துன்பங்களும் நீங்கி, பொங்கல் எம்வாழ்விலும்-வருமானத்திலும் தித்திப்பை உண்டுபண்ணட்டும். இலங்கையின் அனைத்து இன மக்களும் சுமுகமானமுறையில் வாழ்வதற்கு வழிபிறக்கட்டும்- என்றுள்ளது. (ம)

# விவசாயிகளுக்கு வளம் சேர்க்கும் பொங்கலாக அமையட்டும்

விவசாயிகளுக்கு வளம் சேர்க்கும் பொங்கலாக இருக்கட்டும் இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன். அவர் அனுப்பி [illegible] எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயிகள் முதுகெலும்பாக இருக்கின்றார்கள். எனவே அந்த விவசாயிகள் தங்களுடைய விவசாய நடவடிக்கையில் ஏற்றம் காணும் போதுதான் அனைத்து மக்களும் பட்டினி இன்றி வாழ முடியும். எனவே தற்போது நாடு இருக்கின்ற பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க வேண்டுமாக இருந்தால் இந்த வருடம் விவசாய நடவடிக்கைகளில் உறுதிப்பாட்டுடன் ஈடுபட வேண்டும் - என்றுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 14
எழுதிரள், ஒருங்கிணைந்த செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வுகள், இன்று பிற்பகல் 2 மணிக்கு எழுதிரள் பணிமனை, கோண்டாவிலில் நடைபெறவுள்ளன.
நிகழ்வில், "ஏர்முனை" என்ற நூல் வெளியீடு, தமிழ்நாடு தஞ்சாவூர், இயற்கை வழிச் செயற்பாட்டாளர் நிமல் ராகவனின் நீர் நிலைகளை மீட்டெடுப்போம் என்ற அனுபவப் பகிர்வு, பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராசா, சி.சுந்தரேஸ்வரன் ஆகியோரின் இயற்கை விவசாயம் என்னும் மீள்பார்வை ஆகியன இடம்பெறவுள்ளன.
நிகழ்வுகள் இயற்கைவழி இயக்கம், சிறகுகள் அமையம், சுவடி நிறுவகம், எங்கட புத்தகங்கள் ஆகிய அமைப்புகளின் ஒன்றிணைவில் இடம் பெறும் என்று அறிவித்துள்ளனர். (ஒ-ரி1)

◆ ◆ ◆

முல்லைத்தீவு, ஜன.14
முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது.
இதில் முல்லை மாவட்டத்தில் இருந்து அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவாகிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.
அத்துடன் முல்லை மாவட்ட பல்கலைக்கழக ஒன்றியத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. (ச-19)

## கிராமிய நிகழ்வும் கலாசார ஊர்வலமும்

வவுனியா.ஜன.14
பழனி முருகனின் தெய்வீக கிராமிய நிகழ்வும், கலை, கலாசார பாரம்பரிய ஊர்வலமும் வவுனியா சிதம்பரபுரத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.
இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில், வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.
வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் மற்றும் மாவட்ட, பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.
நிகழ்வில் ஆசிகுளம் பகுதியில் உள்ள 6 அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும். 15 அறநெறி ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவர். (ஒ-4-110)




## பொங்கல் விழா

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் பொங்கல்விழா இன்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள புராதன சிவன் கோவிலில் இடம்பெறும். கழகத் தலைவர் லயன்ஜெமினேஸ்தலைமையில் நடைபெறும் விழாவில், சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தைச் சேர்ந்த லயன் ரஜினி றொட்றிக்கோ தம்பதியினர் கலந்து கொள்வர். (ஒ-4-9)

## பொங்கல் பானை வழங்கி வைப்பு

வவுனியா, ஜன.14
வவுனியாவில் எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத்தால் பொங்கல் பானை நேற்று முன்தினமும், நேற்றும் வழங்கப்பட்டது.
'அனைவரும் பொங்குவோம்' எனும் செயற்றிட்டத்தின் கீழ் பொருளாதாரம் நலிவடைந்த வேலங்குளம், சின்னதம்பனை, ஓமந்தை, புதிய வேலர்சின்னக்குளம், மகாறம்பைக்குளம் மற்றும் கருப்பனிச்சான்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன. (ச-110)

## 'பசுமை விவசாய வீட்டுத்தோட்டம்' வடமராட்சியில் விழிப்புணர்வு


யாழ்ப்பாணம், ஜன.14
வடமராட்சி கல்வி அலுவலகம் மற்றும் இராணுவத்தினர் இணைந்து, ஆரோக்கியமான தேசத்தை உருவாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதில் பசுமை வீட்டுத்தோட்டத்தின் மூலம் சமூகங்களிடையே ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் 'பசுமை விவசாய வீட்டுத்தோட்டம்' என்ற ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது.
நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர், 512 ஆவது படைப்பிரிவின் இராணுவப் பொறுப்பதிகாரி மற்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் ஆகியோர்



கலந்துகொண்டு பயிர் நாற்றுக்களை நட்டு வைத்தனர். (ச-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்

## இரத்தினலிங்கம் கிருஸ்ணதாஸ்

(யாழ்ப்பாணம் சாந்தா மோட்டர்ஸ் உரிமையாளர்)

திதி : 14.01.2022

**தெய்வமே**

நாட்கள் நகர்ந்து வருடமும் வந்து விட்டது
கண்களில் நீர்வற்றிப் போகுறது
நடந்தது கனவாகாதோ என்று...

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டதை எண்ணித்துடிக்கின்றோம்

விடா முயற்சியும், மனத்திடமும், அயராத உழைப்பும்
வெளிப்படையான பேச்சும், எளியோரை மதிக்கும்
- பண்பையும்
எண்ணி வியக்கின்றோம்.....

காலனவன் கவர்ந்த கணப்பொழுதில் தாயின்
- அரவணைப்பில்
சேயின் முகமலர்ச்சியை உங்களில் கண்டு
- நாம் வியந்தோம்...

**அப்பா!!!!**

பிரிக்க முடியாத சொந்தமும்
மறக்க முடியாத பந்தமும்
தவிர்க்க முடியாத உயிரும்
எல்லாம் உங்கள் அன்பு மட்டுமே
கல்வி வளம் பெருக வைத்து வாழ்க்கை
- தனைத் தேடித்தந்து
வாழ வைத்த தெய்வம் நீங்கள் ....

ஈரவிழிகளோடும், கலையாத நினைவுகளோடும் உங்கள் ஆன்மா சாந்தியடைய கண்ணீர் துளிகளைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

தொண்டைமனாறு

குடும்பத்தினர்

(NE 17839) (3/6)




JITF 2022

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை**

ஜனவரி 2022

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)


10.00 மு.ப - 8.00 பி.ப

ORGANIZED UNDER HEALTH GUIDELINES

MAIN SPONSOR: INSEE CEMENT | CO - SPONSOR: SLTMOBITEL | OFFICIAL PARTNERS: SAFETY & HYGIENE, FOOD, PRINT MEDIA, ELECTRONIC MEDIA

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION | IN ASSOCIATION WITH | ENDORSED SUPPORTED BY | PARTNER COUNTRY: India

For more information:
Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com




## பிரகாஸ் ரான்ஸ்போட் & ஏஜன்சி (Pvt)Ltd.

PRAKASH TRANSPORT & AGENCIES போக்குவரத்துச் சேவை

**கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு**

எமது யாழ்.கிளை மூலமாகக் குடாநாட்டில் உற்பத்தியாகும் அனைத்துப் பொருட்களையும் தென்பகுதியில் உரிய இடங்களில் ஒப்படைக்கவும், [illegible]த்து வர்த்தகப் பொருட்களையும் வட பகுதி வர்த்தகர்களிடம் ஒப்படைக்கவும் நம்பிக்கையுடன் சேவை செய்யும் எங்கள் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வாடிக்கையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

457, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
Hot line: 021 222 2145
077 538 9987 / 021 222 2958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதியில் இருந்து 350 M தூரத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CR 56061) 1-6

தொடர்பு: 077 9866 444

## தவறவிடப்பட்டுள்ளது

அராலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் கண்ணுக்கு அணியும் கண்ணாடி ஒன்று தவறவிடப் பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 233 1318




# நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திகை நிகழ்வுகள் நேற்று

கொழும்பு, ஜன.14

நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை வைபவரீதியாக ஆரம்பிப்பது தொடர்பான ஒத்திகை நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொலிஸ் கலாசார பிரிவின் அதிகாரிகள் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தன புர, ஜனாதிபதி மகளிர் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வரும் நிகழ்வு அவரது ஆலோசனைக்கு அமைய மிக எளிமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், மரியாதைத் துப்பாக்கி வேட்டுத் தீர்த்தல், வாகன அணி வகுப்பு என்பன இடம்பெறாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கொள்கைப் பிரகடன உரை ஒன்றை நிகழ்த்த வுள்ளார். (எ-இ)


## ஏல விற்பனை

**கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்**

கிளி / முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்திற்குச் சொந்தமான பிளசர் ரக மோட்டார் சைக்கிள் 29.01.2022 திகதி நண்பகல் 12. 00 மணிக்கு மாவட்ட கூட்டுறவு சபை கிளிநொச்சி வளாகத்தில் வைத்து ஏல விற்பனை செய்யப்படவுள்ளது ஏலத்தில் மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்கள் குறித்த நேரத்திற்கு சமூகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் மோட்டார் சைக்கிளை பார்வையிட விரும்புபவர்கள் 24.01.2022ஆம் திகதி தொடக்கம் 28.01.2022 ஆம் திகதி வரை சமாச அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு. ச. மோகனபவன்
தலைவர்
கிளி / முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கியின் சமாசம்
ஏ-9 வீதி, கிளிநொச்சி.


# நவீன சுற்றுலா மையம் கசூரினாவில் மீளமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

சுற்றுலாவிகளைக் கவரும் விதத்தில், காரைநகர் கசூரினா சுற்றுலா மையம் மீளமைக்கப்பட்டுள்ளது என்று காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் மயிலன் அப்புத்துரை தெரிவித்துள்ளார்.

பிரதேச அபிவிருத்தி உதவிளிக்கும் திட்டத்தின்கீழ், பல மில்லியன் ரூபா செலவில் வீதி அபிவிருத்தி, கடைத் தொகுதி மற்றும் பல் நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.


விரைவில் காரைநகர் சுற்றுலா மையம் எல்.டி.எஸ்.பி. திட்டத்தின் கீழ், 50 மில்லியன் ரூபா செலவில் நவீனமயமாக உட்கட்டுமானம் செய்யப் படும். இதற்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

இதனைவிட மேலதிகமாக எமது சபைக் குட்பட்ட வகையில் 425 வீதிகள் வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் சுற்றுலாமையம் பொது நோக்கு மண்டபம் பல் நோக்குத் தேவை கருதி, அரச மற்றும் தனியார் பகுதியினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-50)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மலர்ந்தது
18
11
1947



விண் நிறைந்தது
14
01
2017

வைத்திய கலாநிதி

## குமாரசாமி மகேசன்

வைத்திய சேவையை தொழிலாகக் கொண்டு
மக்கள் சேவை செய்த அன்பு, பண்பு, கடமை
உள்ளம் கொண்ட மகேசன் ஐயாவை
குடும்பத்தினராகிய நாம் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

(ACO 17685) (3/6) குடும்பத்தினர்


## சாரதி, பொதி சுமப்பவர் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு சாரதி, பொதி சுமப்பவர் தேவை. சுய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
**வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்**
**இல.58, நல்லூர் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## நாகபூஷணி திருமண சேவை

**அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உயர் பதவியிலுள்ளோர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர், வெறிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்

021 222 9306, 077 138 7596, 071 999 9306

(CS 1120) 1-6


# மரண அறிவித்தல்



## சுந்தரமூர்த்தி பிரசன்னா

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட சுந்தரமூர்த்தி பிரசன்னா கடந்த (02.01. 2022) அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சுந்தரமூர்த்தி கோதைநாயகி ஆகியோரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற ஆனந்தகுமார் மற்றும் தேவகி ஆகியோரின் மூத்த மருமகனும், நிஷாந்தினி யின் அன்பு கணவரும், ஆராத்யாவின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01. 2022) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் இல.14, அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை களுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

மகிந்தன் (மாமா) - 077 801 2521
கோணேஸ்வரா (மைத்துனன்) - 077 444 8661


## கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

**சமாசத்தின் அங்கத்தவர்**
**இணை அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல் வருமதி சென்மதி தொடர்பாக**

சமாசத்தின் 16.12.2021 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்ட தீர்மானத்திற்கு அமைவாக அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்விற்கு முற்பட்ட காலப்பகுதியில் (2008ஆம் ஆண்டிற்கு முன்) சமாசத்தில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் சமாசத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் தொடர்பான மூல ஆவணங்கள் வைப்பாளர்களிடம் அல்லது கடன் பெற்றவர்களிடம் இருப்பின் அதனை ஏ9 வீதி கிளிநொச்சி எனும் முகவரியில் உள்ள சமாச அலுவலகத்தில் 15.02.2022ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சமாச அலுவலக நேரத்தில் மூலப் பிரதியை காண்பித்து அதன் உறுதிப்படுத்திய பிரதியை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திரு.ச.மோகனபவன்,
தலைவர்
கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்
A9 வீதி, கிளிநொச்சி.


# 18ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பேரானந்தம் உமாசுதன்
(போட்டோ சுதன்)

மண்ணில்
11.12.1974

விண்ணில்
15.01.2004

என்றும் புன்னகை பூத்த வதனத்துடன் ஊரெங்கும்
பட்டாம் பூச்சியாய் பறந்து திரிந்து எம் அனைவர்
மனதையும் கொள்ளையடித்து பார்க்கும் இடமெல்லாம்
உன் நினைவுகள் மட்டும் விட்டு நெடுந்தூரம்
சென்றதேனோ சுதனே!! பதினெட்டு ஆண்டுகள் சென்றாலும்
உன் நீங்காத நினைவுகளோடு
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

காரானர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
(NE 17841) (3/6)

உன் நினைவுகளோடு வாழும்
குடும்பத்தினர்

# 100 மாணவர்களுக்கு காலணி வழங்கல்

கிளிநொச்சி, ஜன. 14

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் காலணிகள் வழங்கப்பட்டன.

இராணுவத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக முல்லைத்தீவு பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யூ. ஏ. எஸ். எஸ். வனசிங்கவும் பூநகரி 66 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி, இராணுவத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

# மணிவிழா வாழ்த்து

Best Wishes



திருமதி

## தவமணி கிருஷ்ணன்

(குலசிங்கம்)

(SLTS-I பயிற்றப்பட்ட இந்து சமயம்)

**சேவைக்காலம்**

**மன்/ கரிசல் றோ.க.த.க.பாடசாலை**
**- 27.11.1989 - 15.09.1991**
**மன்/வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை**
**- 16.09.1991 - 06.02.1994**
**யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை**
**- 07.02.1994 - 31.12.1995**
**மன்/வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை**
**- 01.01.1996 - 07-05-2002**
**யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்**
**- 08.05.2002 - 08.02.2015**
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்**
**- 09.02.2015 - 13.01.2022**

யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் தற்போது கல்விக் கற்பித்தும் பல சேவைகள் செய்தும் நேற்று (13.01.2022) ஓய்வு பெறும் எமது தாயார் அவர்களின் சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம். மற்றும் இன்று (14.01.2022) அவரது 60 ஆவது பிறந்ததின வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**கணவர், பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

கைக்குண்டு மீட்பு

## அச்சத்தை ஏற்படுத்த திட்டமிட்ட சூழ்ச்சி!

### பேராயர் கடும் சீற்றம்

கொழும்பு, ஜன. 14

"பொரளை ஆனந்த ராஜகருணா மாவத்தையிலுள்ள தேவாலய வளாகத்திலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சூழ்ச்சி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. இது விடயத்தில் உண்மையைக் கண்டறிவதைவிட, கதைகளை புனைவதற்கே பொலிஸார் முற்படுகின்றனர். கத்தோலிக்க தேவாலயங்களில் அச்சத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி நடவடிக்கையாகவே இதனை பார்க்கின்றோம்."

இவ்வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தையடுத்து, குறித்த தேவாலயத்தில் பாதுகாப்பு மற்றும் சுத்தத்துக்கு பொறுப்பாக இருந்தவர் மற்றும் அவரின் உதவியாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவ தினத்தன்று காலை முதல் இடம்பெற்ற விடயங்களை சி.சி.ரி.வி. கமரா காட்சிகள்மூலம் கண்காணிப்பதற்குப் பதிலாக மாலை 3.30 மணிக்கு பின்னரான காட்சிகள் போதுமென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவ தினத்தன்று காலை 9.52 மணிக்கு நபரொருவர், சிறிய பொலித்தீன் பையொன்றை எடுத்துக்கொண்டு நொண்டியவாறு தேவாலய வளாகத்துக்குள் நுழைந்துள்ளார். அதன்பின்னர் தேவாலயத்துக்குள் அவர் சென்றுள்ளார். முன்பகுதிக்கு வந்த அவர், அங்கு எதையோ செய்யும் காட்சிகள் பதிவாகியுள்ளன. அங்கு ஒருவர் வந்த பின்னர் அவர் பதற்றத்துடன் வெளியேறுகிறார். நொண்டியபடி வந்த அவர், சாதாரணமாக வெளியேறும் காட்சிகளும் பதிவாகியுள்ளன. இந்தக் காட்சிகளை பொலிஸார் சோதிக்கவில்லை. ஏன், எதற்காக காலையில் இருந்து நடந்தவற்றை கண்காணிக்கவில்லை?

யார் குண்டு கொண்டுவந்தார் என்பதைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக தேவாலயத்தை கூட்டுவதற்குச் சென்றவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவத்தை சூழ்ச்சியாகவே பார்க்கின்றேன்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் என்றாவது மரணிக்க நேரிடும். அப்போது உண்மை வெளிவரும். அவர்களின் ... அது அவர்களின் ... பாதிக்கும்- என்றார். (த-44)

## பொங்கல் பொதிகள் வழங்கல்

சாவகச்சேரி.ஜன.14

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சங்க அங்கத்தவர்களுக்கு நேற்றுப் பொங்கல் பொதிகளை வழங்கினர்.

சங்கத்தின் தலைவி புஷ்பராணி தலைமையில், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவநங்கை இராமநாதனால் பொதிகள் வழங்கப்பட்டன. (ஒ-4-9)

## சந்தேகநபர் கைது



யாழ்ப்பாணம், ஜன.14

வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்முறைச் சம்பவம் ஒன்று தொடர்பாக இந்த நபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்றும், இந்த நபர் வன்முறைக் கும்பல் ஒன்றின் சூத்திரதாரி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் சுன்னாகம் பிரதேசத்தில் நடமாடுகின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## அரசின் தவறுகளால் பொருளாதார நெருக்கடி

### திஸ்ஸவிதாரண விசனம்

கொழும்பு, ஜன. 14

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கொரோனாத் தொற்றுடன் அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களும் காரணம் என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையின் உண்மைத் தன்மையை அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.- என்றார். (த-இ)

## பல்கலைகளை முழு அளவில் திறக்கத் திட்டம்

கொழும்பு, ஜன.14

நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்து முழு எண்ணிக்கையிலான மாணவர்களுடன் பல்கலைக்கழகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தற்போது 50 சதவீத மாணவர் எண்ணிக்கையுடன் பல்கலைக்கழக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களுக்கு...

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின்தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி மிக மோசமான ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்கள் அனுபவிக்கலாம் என்று கூறுமளவுக்கு துரோகத்தனம் போகின்றது.

புதிய அரசமைப்பு நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்படுகின்றபொழுது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாக உலகத்துக்குக் காட்டும் நடவடிக்கையே ஆகும்.

இந்த விடயத்தை நாம் ஆழமாகப் பார்க்க வேண்டும். நாம் மீண்டும் கூறுவதென்றால், இந்திய முகவர் அமைப்புக்கள் 12 வருடங்களாக மக்களிடம் பொய் சொல்லியதை இன்று உணரக் கூடியதாக உள்ளது.

ஒரு தேர்தல் முடிவடைந்து இன்னொரு தேர்தல் நடக்க இன்னும் சில வருடங்கள் இருக்கும் நிலையில், இலங்கை முகவர்கள், இந்திய முகவர்கள் இணைந்து 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்றநிலை உருவாகியிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையைப்பெற்ற தமிழ்த் தரப்பும் 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மக்களை அணிதிரட்ட முடிவெடுத்துள்ளது. எதிர்வரும் ஜனவரி 30ஆம் திகதி போராட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ளது - என்றார். (த-26)

## மைத்திரிபாலவை...

வருகின்றது. இதன் பின்னணியில் செயற்படுபவர்கள் யார் என்பதும் எமக்குத் தெரியும். நேரம்வரும்போது விவரம் வெளியிடப்படும்" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"எமது தலைவர் அரசை விமர்சித்துவருகின்றார். அதனால், ஏதாவதுசெய்து அவரை சிறையில் அடைப்பதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்தச்சவாலை அவர் எதிர்கொள்வார். எமது கட்சியும் தயார்நிலையில் தான் உள்ளது. மைத்திரிபால சிறிசேனவை பலவந்தமாக சிறையில் அடைக்க முற்படுவது யார் என்பதும் எமக்கும் தெரியும். அரச பிரதானிகளா அல்லது வெளியில் உள்ளவர்களா எனத் தற்போதே குறிப்பிடமுடியாது. நேரம்வரும்போது எல்லாவற்றையும் வெளிப்படுத்துவோம்.

நாட்டில் சட்டமென ஒன்று இருக்கின்றது. ஆனால், அதற்கு அப்பால்சென்று, மைத்திரியை சிறையில் அடைக்க வேண்டும் என சில அமைச்சர்கள் வலியுறுத்திவருகின்றனர். எனவே, இதன் பின்னணியில் இரகசிய நிகழ்ச்சி நிரலொன்று இருக்கக்கூடும்.

அதேவேளை, அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்னும் முடிவெடுக்கவில்லை. எனினும், அரசின் பயணம் தவறெனில் அதனைத் தைரியமாக சுட்டிக்காட்ட மத்திய குழு அனுமதித்துள்ளது. அரசின் பதவிக் காலம் முடியும்வரை நாம் அரசில் அங்கம் வகிப்போமா என்பதை இப்போது கூறமுடியாது. சிலவேளை, எமது கட்சி அரசிலிருந்து வெளியேறவும் கூடும்" என்றார். (த-44)

## மாதகல்...

பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதே பகுதியைச் சேர்ந்த எட்வர்ட் மரிய சீலன் கடந்த 11ஆம் திகதி தொழிலுக்குச் சென்றிருந்தநிலையில், அவரது படகு சேதமடைந்தநிலையில் கரையொதுங்கியதைத்தொடர்ந்து, அந்த மீனவரும் சடலமாகக் கரையொதுங்கியிருந்தார். அவரது இறப்புக்குக் காரணம் கடற்படைப் படகு மோதியமையே என்று சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டுசக மீனவர்கள் கூறுகின்றனர். ஆனால், அந்தக் குற்றச்சாட்டை மறுத்திருக்கும் கடற்படையினர், தமிழக இழுவைப்படகு மோதியிருக்கலாம் என்றும் கதைவிடுகின்றனர்.

இந்தநிலையில், குறித்த மீனவரின் சாவுக்கு நீதி கிடைக்கவேண்டும், மீனவர்களின் உயிர் கடலில் பறிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது, மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும், மீனவக் குடும்பங்களின் குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க வழியேற்படுத்தவேண்டும், உயிரிழந்த மீனவர்களுக்கு அரசே நீதி வழங்கு, உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியவாறு நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் நடைபெற்ற குறித்த போராட்டத்தில், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், பிரதேசசபை உறுப்பினர்களான அனுஷன், ஜிப்ரிக்கோ, ரமணன், சஜீவன், கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு எதிர்ப்பை வெளியிட்டனர். (த-319,27)

## 18ஆம் திகதி...

றுக் காரணமாக உயிரிழந்த சம்பவ தொடர்பில், சத்திரசிகிச்சை மேற்கொண்ட மருத்துவக்குழு உள்ளிட்ட விவரம் அடங்கிய அறிக்கையை எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை யாக்கருவைச் சேர்ந்த மனோன்மணி குலவீரசிங்கம் (வயது 60) என்ற பெண்ணே கிருமித்தொற்று ஏற்பட்டு கடந்த வியாழக்கிழமை உயிரிழந்திருந்தார்.

அவருடைய கர்ப்பப் பையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக அதனை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது அவரது வயிற்றுக்குள் துணியை வைத்து தைத்ததால், கிருமித் தொற்று ஏற்பட்டு அவர் உயிரிழந்தார் என உடற்கூற்றுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன், தனியார் மருத்துவமனைப் பணிப்பாளர், மந்திகை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் உள்ளிட்டோரை நேற்று மன்றில் முன்னிலையாக உத்தரவிட்டிருந்தார். சட்ட மருத்துவ வல்லுநரிடம் நேற்று வாக்குமூலம் பெறப்பட்டது.

பின்னர், குறித்த தனியார் மருத்துவமனை சத்திரசிகிச்சை கூடத்துக்குச் சென்ற நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் 18ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-26)

## பங்காளிகளே...

முகம் கொடுக்கவேண்டும். வஞ்சகம் இல்லாத நிலையில் ஒவ்வொரு கட்சியும் முன்வந்தால் இணைந்து செயற்படலாம்.

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். தமிழ் மக்கள் கூட்டணி பதிவுசெய்யப்பட்ட கட்சியாக தேர்தல்கள் ஆணைக்குழுவால் அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தில் நேற்றுமாலை குறித்த செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கையிலேயே, விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பொருளாதார ரீதியாகப் பலமிழந்து காணப்படுகின்றார்கள். கட்சி என்ற ரீதியில் மக்களுக்கு என்ன செய்யவேண்டும்? என்பது சம்பந்தமாகப் பேசியுள்ளோம். அந்தவகையில், வீட்டுத்தோட்டம், காளான் வளர்ப்பு பற்றி ஆராய்ந்தோம். எங்களால் முடிந்தளவுக்கு புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து மக்களுக்குப் பொருளாதார ரீதியாக உதவிசெய்ய முடியும் என்று பேசியுள்ளோம்.

**தவழ்ந்து எழுந்துள்ளோம்**

தவழ்ந்துவிட்டு தற்பொழுது எழுந்து நிற்கும் கட்சியாக நாங்கள் இருக்கின்றோம். அடிமட்டத்தில் மக்களின் ஆதரவை நாங்கள் உறுதிசெய்ய வேண்டும். அடிமட்டத்தில் மக்களிடம் வேலை செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதே வேளை, தலைவர்கள், மூத்தவர்களின் அனுபவங்களும் அறிவும் அரசியல் ஞானமும் இளைஞர்களின் வீரியமும் சேர்ந்து எமது கட்சியைக் கொண்டு நடத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. கொரோனா, நாடாளுமன்ற நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் எமது கட்சியின் செயற்பாடுகள் குறைவாகவே அமைந்தன.

இதுவரை காலமும் நாங்கள் கூட்டணி என்ற வகையிலே ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டோம். என்னுடைய கருத்து என்னவென்றால், வஞ்சகம் இல்லாத நிலையில் ஒவ்வொரு கட்சியும் முன்வந்தால் இணைந்து செயற்படலாம். உள்ளே ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு சேர்ந்து செல்வோம் என்று கூறிக் கொண்டு இறுதிநேரத்தில் வெளியில் தள்ளுவதை ஏற்கமுடியாது. எல்லோரும் சேர்ந்து செயற்பட முடியும் என்றால் அதனை நான் வரவேற்கின்றேன். ஆனால் அதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றன - என்றார். (த-125)

## ஈ.எஸ்.பி...

கௌரவித்துள்ளது.

மனிதநேயம் மற்றும் சமூகசேவைகளுக்காக குறித்த பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் இந்தப் பட்டத்தை வழங்கினார். வடபகுதியில் கல்வி, விளையாட்டுத் துறை என்பவற்றுக்கும் இந்துக் கோவில்களுக்கும் தன்னாலான உதவிகளை ஈ.எஸ்.பி. நாகரத்தினம் வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-20)

## யாழ்.முற்றவெளியில்...

'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அரசியல் கைதிகளின் உறவுகள், மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் என9; பலரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீண்ட நாள்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தமிழர் தரப்பு பல அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.

இந்தநிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வில் ஒளியேற்றவும் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டியும் விடுதலைப் பொங்கல் நிகழ்வு நடத்தப்படுகின்றது என்று குரலற்றவர்க ளின் குரல் அமைப்பினர் தெரிவித்தனர். (த-26,27)

## நேற்று...

மின் தடைக்கு காரணம் எனவும் மின்சார சபை தெரிவித்துள்ளது. அறிக்கையொன்றை வெளியிட்டு மின்சார சபை இதனைக் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## புதைந்த...

டுள்ளது. எனினும் சீரற்ற காலநிலையால் அவற்றை அகழும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

உழவு இயந்திரத்தின் சில பாகங்கள் மீனவர்களால் கடந்த 8ஆம் திகதி இனங்காணப்பட்டிருந்தன. உழவு இயந்திரத்தின் நடுச் சில்லின் இருபெரிய ரயர்களும், இரும்புத்துண்டுகளுமே கரையில் தென்பட்டுள்ளன.

அவை, 2009 ஆம் ஆண்டு போரின் இறுதி நாள்களில் மக்களால் கைவிடப்பட்ட உழவு இயந்திரத்தின் பாகங்களாக இருக்கலாம் என மக்கள் தெரிவித்துள்ளார்கள். சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டுள்ளனர். குறித்த உழவு இயந்திரத்தின் பாகங்களை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டி எடுக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

நேற்று இரண்டு கனரக இயந்திரங்கள் மூலமாகத் தோண்டப்பட்டபோது, இரண்டு உழவு இயந்திரங்கள் புதைந்து காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது. இந்த நடவடிக்கையின்போது உழவு இயந்திரத்தின் பாகங்கள் சில மீட்கப்பட்ட நிலையில், நீண்டநேரமாகியும் கடல் அலையின் சீற்றம் மற்றும் கடல்தண்ணீர் வந்துகொண்டிருந்த காரணத்தால் , குறித்த பகுதி நேற்றுமதியத்துடன் மூடப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் முல்லைத்தீவுப் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். (த-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## திறன்வகுப்பறை திறப்பு விழா

வவுனியா, ஜன. 14

வவுனியாதெற்கு,வடக்கு வலயங்களைச் சேர்ந்த 12 பாடசாலைகளுக்கு திறன்வகுப்பறைகள் வழங்கும் திட்டத்தில், கடந்த 6 ஆம் திகதி வவுனியா தெற்கு வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயம், அடைக்கல அன்னை வித்தியாலயம், அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டன.

ஐ.எம்.ஏச்.ஓ -யு.எஸ்.ஏ. மற்றும் ரத்தினம் பவுண்டேசன்யு.கே இணைந்து இந்தப் பாடசாலைகளுக்கான திறன்வகுப்பறைகளை வழங்கியதோடு, பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சிறந்த வளவாளர்கள் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றனர்.

நிகழ்வில், முதன்மை விருந்தினராக வலயக்கல்விப் பணிப்பாளர் சுரேந்திரன் அன்னமலர், சிறப்பு விருந்தினராக ஐ.எம்.ஏச்.ஓ யு.எஸ்.ஏ இன் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி சு.கிருஷ்ணகுமரர், கௌரவ விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு திறன்வகுப்பறைக்கான பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்ததுடன், திறன் வகுப்பறைச் செயற்பாடுகளையும் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தனர். (ஒ-ரி1)

சுமார் 10 மாதங்கள் தடுப்பின் பின்னர்

# இணைய ஊடகமொன்றின் பணியாளர்கள் நீதிமன்றில்!

கொழும்பு, ஜன. 14

டென்மார்க்கை தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் 'யூரியூப்' ஒன்றின் பணியாளர்களான டிவினியா நிலுசினி, விமல்ராஜ் ஆகியோர் சுமார் 10 மாதங்கள் தடுப்புக் காவல் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் நேற்று முதன்முறையாக முற்படுத்தப்பட்டனர். அவர்களை வழக்கு முடியும் வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளை மீள் உருவாக்க முயற்சித்தனர் என்றுகூறி 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் , ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா மன்றில் முன்னிலையாகி, பயங்கரவாத தடைச் சட்டத்தின் 7 (2) ஆம் பிரிவின்கீழ் அவர்களை விளக்கமறியலில் வைக்க போதுமான ஆதாரங்கள் உள்ளனவா என்று நீதிவான் ஆராயவேண்டும் என சுட்டிக்காட்டினார்.

அத்துடன், புலிகளை மீளுருவாக்க உதவினர் என்று அரசியல்வாதிகள் மீது குற்றஞ்சுமத்தும்போது தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆவது அத்தியாயத்தை பயன்படுத்தும் பொலிஸார், ஊடகவியலாளர்கள் விடயத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றனர் என்று சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளித்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், சந்தேகநபர்கள் இருவரினதும் நிதிப் பின்புலம் தொடர்பில் தொடர் விசாரணைகள் இடம்பெறுகின்றன என பல தரவுகளை முன்வைத்து குறிப்பிட்டனர்.

'எனினும், சந்தேகநபர்கள் இருவரும், இன, மத பேதங்களுக்கு அப்பால் உதவியுள்ளனர், இராணுவத்துக்குக்கூட உதவிகளைச் செய்துள்ளனர்' என்று சுட்டிக்காட்டினார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா.

இறுதியில், இந்த விடயத்தில் உடனடியாக விசாரணைகளை நிறைவு செய்து, கோவையைச் சட்ட மா அதிபருக்கு அனுப்பி உரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிவான் கட்டளையிட்டார். (து)

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த, இந்திய மீனவர்கள் 43பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், இவர்களுக்கான விளக்கமறியல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஒ-26)



## கவசம் குறுந்திரைப்படம் மன்னாரில் வெளியீடு

மன்னார்,ஜன.14

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் தயாரிப்பில், ஊடகவியலாளர் எஸ்.ஜெகனின் இயக்கத்தில் தயாரிக்கப்பட்ட 'கவசம்' எனும் குறுந்திரைப்படம் மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் , மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் , வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் றோட்டரிக் கழகத்தின் தலைவர் பிரியதர்சன் இமானுவேல் , நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் லூர்து நாயகம் புவனம் ஆகியோர் குறுந்திரைப் படத்தை வைபவரீதியாக வெளியிட்டனர். நிகழ்வில் குறுந்திரைப்படத்தில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு விருதுகள், அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. (ஒ-4-56)

**COLACITY (கோலாசிற்றி)**
No. 234, நாவலர் வீதி யாழ்ப்பாணம்
A/L 2023
கலை, வர்த்தகப் பிரிவு
நீங்கள் நன்கு அறிந்த முன்னணி பட்டதாரி ஆசிரியர் குழாமினால் விரிவுரைகள் நடைபெறும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் ஜனவரி 15 (சனி) காலை 8.00 மணி
021 320 2787
077 8435 224
நிர்வாகம்.
(CR 5606) 1-6

**GERMAN INSTITUTE**
German, Netherland (Holand) Swiss, Ostria நாடுகளுக்கான Deutsch மற்றும் Dutch மொழி வகுப்புக்கள் Embassy யின் A1 Certificate க்கு ஏற்றவாறு
Mrs. P. Kajenthini
(CS 1103) (3/6) T.P : 077 160 4823, Jaffna.

**வேலைவாய்ப்பு**
**VIDEO EDITOR, ALBUM DESIGNER**
Adobe Premier இல (Wedding, Birthday, Puberty
EDIT பண்ணி அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்
தகுந்த ஊதியம் வழங்கப்படும்
தொடர்பு: 076 752 8616
மின்னஞ்சல்: maplevision@gmail.com
(cs.42180) (2.6)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ம் வீதியில் 81 பரப்புக்காணி. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 KM தூரம்
வீடமைப்பதற்கு நல்ல சூழல்
076 890 9259
077 015 0353
(CS 1124) 1-6

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 30 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 3 லட்சம்.
தொடர்பு: 077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204.
(CS 42215) 1-6

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலபரப்பு 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 814 7389, 077 614 7333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.